வடக்கின் முதல நாள்தழ - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 21.11.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 325 | பக்கங்கள் : 08

## குற்றவாளிகளுக்கு அடைக்கலம் வழங்காத அரசாங்கம் உருவாக்கம்

### ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு தாய் நாடு, தேசம், பிள்ளைகள் பலியாகாமல் தடுப்பதே எனது ஒரே நோக்கம். எந்தவொரு குற்றவாளிக்கும் அல்லது போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் எவருக்கும் அரசியல் அடைக்கலம் வழங்காத ஓர் அரசாங்கம் இன்று அமைக்கப் பட்டுள்ளது என்று ஜனாதிபதி

07

# மட்டு. தாந்தாமலையில் விகாரை நிறுவ திட்டமா?



### சந்தேகம் எழுப்புகிறார் அரியநேத்திரன்

மட்டக்களப்பு, நவ. 21

மட்டக்களப்பு - படுவான்கரையில் தாந்தாமலை முருகன் ஆலயத்துக்கு செல்லும் வீதிகளில் இரு இடங்களில் "தாந்தாமலை தொல்லியல் இடம்", என்று அடையாளப்படுத்தப்படும் பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. இது, பௌத்த விகாரைகளை நிறுவும் திட்டமாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பியுள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மட்டக்களப்பு - படுவான்கரை பெருநிலம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள தாந்தாமலை முருகன் ஆலயத்தில் செல்லும் வீதிகளில் இரு இடங்களில் இன்று (நேற்று) பிற்பகல் 1.30 மணிக்கு தொல்பொருள் திணைக்களத்தால் அறிவித்தல் பலகைகள் இடப்பட்டுள்ளன.

அதில், "தாந்தாமலை தொல்லியல் இடம்", என்று மூன்று

07

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வுபூர்வ நினைவேந்தலுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 21

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் தம்முயிரை ஈகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

தமிழின உரிமை போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் லெப்டினன்ட் சங்கர் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) 1982 நவம்பர் 27ஆம் திகதி வீரச்சாவடைந்தார். அவர் வீரச்சாவடைந்த நவம்பர் 27ஆம் நாளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் உயிர்நீத்த அனைவரும் 1989ஆம் ஆண்டு முதல் மாவீரர் நாள் என்ற பெயரில் நினைவுகூரப்படுகிறார்கள்.

மாவீரர் நாளை கடைப்பிடிப்பதற்கு முன்னோடியாக நவம்பர் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் நினைவேந்தப்படுகிறது.

07

## அநுர அரசாங்கத்துக்கு எதிராக நுகேகொடையில் இன்று பேரணி

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக பொதுஜன பெரமுன தலைமையில் நுகேகொடையில் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்காது என்று அறிவித்துள்ளது. இதே போன்று வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசிய கொள்கை சார் கட்சிகள், மலையக தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும்

07

## இந்தியா செல்கிறார் ரணில் போராட்டத்தில் பங்கேற்கார்

கொழும்பு, நவ. 21

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் திருமண நிகழ் வில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றைய தினம்

07



## "ஆனந்தசுதாகரின் விடுதலைக்கு வழிசமையுங்கள்"

யாழ்ப்பாணம், நவ. 21

தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகர் விடுதலை பெற்று வீடு திரும்பி தனது பிள்ளைகளை அரவணைத்து பாதுகாக்க தமிழ்ச் சமூகமாக நாம் வழிசமைக்க வேண்டும்", என்று

07

## மின்சார சபைக்கு நட்டம் என்பதில் உண்மையில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, நவ. 21


இலங்கை மின்சார சபை ஆயிரத்து 300 கோடி ரூபாய் நட்டம் என்று கூறுவதில் எந்த உண்மையும் இல்லை. மாறாக 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் இலாபமே அடைந்துள்ளது - என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

07

## இந்தியாவே எம்மை பார்த்து பயப்பட வேண்டும் நாமல்ல

### சாணக்கியன் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 21

"நாங்கள் இந்தியாவை பார்த்து பயப்படத் தேவையில்லை. இந்திய மக்கள் தான் எங்களைப் பார்த்துப் பயப்பட வேண்டும். இலங்கையின் இருப்பிடம் இந்தியாவின்

07

## "சைபர்" குற்றங்கள் வடக்கிலேயே அதிகம்!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, நவ. 21

"நாட்டில் நாளொன்றில் சைபர் குற்றங்கள் (கணினி குற்றங்கள்) தொடர்பில் சுமார் 25 முறைப்பாடுகள் பதிவாகின்றன. வடக்கு மாகாணத்திலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவாகின்றன" என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

மேலும், நிதி கணினி குற்றங்கள் குறித்து விசேட

07

## வரி வருமானம் ரூ.200,224 கோடி

கொழும்பு, நவ. 21

இந்த ஆண்டில் இது வரையான காலப்பகுதியில் 2 இலட்சத்து 224 கோடி ரூபாயை வரி வருமானமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் மொத்த

07

## யாழில் பிறந்த இரட்டை குழந்தைகள் மரணம்

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணத்தில் பிறந்த இரட்டை குழந்தைகளில் மற்றைய குழந்தையும் நேற்று உயிரிழந்தது. ஏற்கனவே, பெண் குழந்தை உயிரிழந்து விட்ட நிலையில் தற்போது ஆண் குழந்தையும் உயிரிழந்தது.

இளவாலையை சேர்ந்த தர்சன் அஸ்வின் என்ற 9 மாதக் குழந்தையே நேற்றைய தினம் உயிரிழந்தது.

யாழ்ப்பாணத்தில் இளவாலையை சேர்ந்த தம்பதியருக்கு 9 மாதங்களுக்கு முன்னர் ஆணும்

07

## அர்ச்சுனா - இளங்குமரன் சபையில் வாக்குவாதம்!

கொழும்பு, நவ. 21

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், இ. அர்ச்சுனா ஆகியோர் நேற்றைய தினம் பாராளுமன்றில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றில் உரையாற்றிய இளங்குமரன், "சிலர் கமெராவுக்கு முன்பாக வீர வசனம் பேசுகின்றனர். கமெராவுக்கு பின்னால் தமிழர்களை கொன்றவர்களிடம் கைகோத்து பழகுகின்றனர். குறித்த நபர் பரீட்சையில் எழுத தெரியாமலேயே சித்தியடைந்து விட்டு பாராளுமன்ற கமெராவுக்கு முன்பாக

07

## கால்தவறி கிணற்றில் விழுந்தவர் பலி!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், நவ. 11

வெளிநாட்டிலிருந்து வந்தவர் கால் தவறி கிணற்றில் விழுந்ததில் உயிரிழந்தார்.

ஆனைக்கோட்டை - ஆறுகால் மடம்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. வடக்கு பிரதேச சபையில் மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 21

தமிழ் மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி நேற்றைய தினம் வலி. வடக்கு பிரதேச சபையின் அமர்வு ஆரம்பமானது.

சபையின் தவிசாளர் சோம சுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த அமர்வி சபா மண்டபம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன், மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட் டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் கட்சிபேதமின்றி அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்றனர் (ஐ-05)

# மன்னாரில் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு!

மன்னார், நவ. 21

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் நேற்றைய தினம் மதிப்பளிக்கப்பட்டனர்.

மன்னார் நகர மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதில், 150இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் உறவுகள் பங்கேற்றனர்.

மாவீரர்கள் நினைவேந்தப் பட்டதைத் தொடர்ந்து உரைகள் நிகழ்த்தப்பட்டு, தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாவீரர்களின் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த மதிப்பளிப்பு நிகழ்வில் அருட்தந்தையர்கள், முன்னாள் போராளிகள்



பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# வடக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் புத்திக கடமையேற்றார்!

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக ஜி. எம். எச். புத்திக சிறிவர்த்தன நேற்று வியாழக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பணிமனையில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வ சர்வமத வழிபாடுகளுடன் ஜி. எம். எச். புத்திக சிறிவர்த்தன தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த திலக் தனபால வட மத்திய மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டநிலையில் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நேற்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

கடமையேற்பு நிகழ்வில் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜி. எம். எச். புத்திக சிறிவர்த்தன இதற்கு முன்னர் பொலிஸ் தலைமையகம் மற்றும் வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிகளை வகித்திருந்தார். (ஐ-05)

# சட்டவிரோத மணல் அகழ்வு டிராக்டர்களுடன் இருவர் கைது

கிளிநொச்சி, நவ. 21

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு டிராக்டர்களை கைப்பற்றிய இராணுவத்தினர் அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி - கண்டாவளை - கல்லாறு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கல்லாறு பகுதியில் தொடர்ச்சியாக சூழலை பாதிக்கும் விதமாக நடைபெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக இந்தக் கைது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாமனிதர் ரவிராஜின் 19ஆம் ஆண்டு நினைவு


தென்மராட்சி, நவ. 21

மாமனிதர் ரவிராஜின் 19ஆவது ஆண்டு நினைவுதினத்தையொட்டி "மாமனிதம்" (மாநில சுயாட்சி உரையரங்கம்) நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசமைப்பு உருவாக்கத்தின்போது தமிழ் பேசும் மக்களுக்கு என்ன தேவை மற்றும் தமிழ் பேசும் கட்சிகள் இடையேயான ஒற்றுமை தொடர்பில் உரையரங்கம் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசு கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சமூக பிரதிநிதிகளும் பங்கேற்பர் என்று ஏற்பாட்டாளர்களான இயற்கையின் நண்பர்கள் இயக்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை பார்வையிட்ட நீர் வழங்கல் அமைச்சர்



வடமராட்சி, நவ.21

வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தாளையடியில் அமைந்துள்ள கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை பார்வையிட்டார்.

நேற்று வியாழக்கிழமை களப் பயணமாக இங்கு வந்த அவர், தாளையடி கடல்நீரை நன்னீராக்கும் செயல்முறைகள் மற்றும் பொறியியல் தொகுதி என்பவற்றை பார்வையிட்டார். அத்துடன், அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார். (ஐ-02-08)

# கள்ளுத் தவறணையில் முதியவர்மீது தாக்குதல்

## மூச்செடுக்க சிரமப்பட்டவரை திருப்பி அனுப்பிய மருத்துவமனை

யாழ்ப்பாணம், நவ. 21

கள்ளுத்தவறணையில் முதியவர் ஒருவரை இளைஞர்கள் இருவர் தாக்கியதில் அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் உள்ள கள்ளுத்தவறணை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தவறணைக்கு சென்ற முதியவரை அங்கிருந்த இளைஞர்கள் இருவர் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர். தாக்குதலில் நிலைகுலைந்த முதியவர் மூச்செடுப்பதில் சிரமப்பட்டார். இதையடுத்து அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆனால், முதியவரின் உடல்நிலை மோசமடைந்து இருப்பதால் சிகிச்சை அளிப்பது சிரமம் எனக்கூறி அவரை திருப்பி அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து முதியவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

முதியவரை தாக்கிய சந்தேகநபர்களை கைது செய்ய சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்தது கார்!



வவுனியா, நவ. 21

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று ஆற்றுக்குள் பாய்ந்தது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த காரே நொச்சிமோட்டை பாலத்தில் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்தது.

விபத்தின் போது சாரதி மாத்திரமே காரில் இருந்தார். அவர் அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் உயிர்தப்பினார்.

இந்த விபத்தால் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குழாயில் வெடிப்பு ஏற்பட்டு நீர் வெளியேறியது.

விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேசமயம், மழையுடனான காலநிலை நீடிப்பதால் வாகன சாரதிகள் மிக அவதானமாக வாகனங்களை செலுத்த வேண்டும் என்று வவுனியா பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-10)

# இலஞ்சம் பெற முயன்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது

வவுனியா, நவ. 21

முறைப்பாடு ஒன்றை ஏற்றுக்கொள்வதற்காக இலஞ்சம் பெற முயன்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு கைது செய்துள்ளது.

வவுனியா - நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே நேற்றுமுன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த அதிகாரி முறைப்பாடு கொடுக்க வந்த ஒருவரிடம் அதனை ஏற்றுக் கொள்வதற்காக இலஞ்சம் பெற முயன்றுள்ளார். அந்தச் சமயமே இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபர் நேற்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ-10)

# பச்சிலைப்பள்ளி நடமாடும் சேவை; பொதுமக்கள் பலர் பயன்பெற்றனர்

கிளிநொச்சி, நவ. 21

பச்சிலைபள்ளி பிரதேசத்தில் ஜனாதிபதி செயலகத்தின் கிளீன் சிறீ லங்கா வேலை திட் டத்தின் கீழ் மீள்குடியேறிய மக்களுக்கான பல்வேறு சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையிலான நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை 9 மணிக்கு பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், பிர தேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள், காணி விடயங்கள் உட்பட பல சேவைகள் இந்த நடமாடும் சேவையில் வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் நூற்றுக்கணக்கான வர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
21.11.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசியல்வாதிகளை திருத்தலாம் என்பது...!

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றிருந்தது. இந்த சந்திப்பின்போது மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் பேசப்பட்டபோதிலும் கூட, புதிய அரசமைப்பின் ஊடான அரசியல் தீர்வு தொடர்பிலும் பேசப்பட்டிருக்கிறது. அதாவது, எது இப்போது தேவையற்றதோ, அது பற்றியும் பேசப்பட்டிருக்கிறது. நாம் தொடர்ந்தும் ஒரு விடயத்தை குறிப்பிட்டு வந்திருக்கிறோம் - அதாவது, அரசியல் தலைமைகள் என்போர் கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ளும் அரசியல் முதிர்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ளும் முதிர்ச்சி இல்லாவிட்டால், ஒருவரிடம் என்ன ஆற்றல் இருந்தும் பயனில்லை. ஆற்றல் என்பது சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு செயல்படுவதுதான். தன்னைவிட பலமுள்ள ஒரு அரசனோடு சண்டையிடுவதானது யானையிலிருக்கும் ஒருவரோடு, தரையிலிருந்து சண்டையிடுவதற்கு சமமானதாகும் - அவ்வாறான நிலையில் புத்தியுள்ள ஒருவன் செய்ய வேண்டிய சண்டையை தவிர்த்துக் கொள்வதாகும் என்பார் சாணக்கியர். ஏனெனில், அவ்வாறான நிலையில் சண்டைக்கு செல்லும் ஒருவர் தன்னிடமுள்ளவற்றையும் இழந்து, இறுதியில் மண்டியிட வேண்டிய நிலையேற்படும். மண்டியிடுவதை விடவும் இருப்பதைத் தக்கவைத்துக் கொண்டு பிழைப்பது புத்திசாலித்தனமல்லவா என்பதுதான் மேற்படி அறிவுரையின் தாற்பரியம்.

ஆனால், தமிழ் அரசியல் தலைவர்கள் என்போரோ நாங்கள் எந்தக் காலத்திலும் புத்திசாதுர்யமாக சிந்திக்க மாட்டோம் என்று விரதம் இருப்பவர்களாக இருக்கின்றனர். இவ்வாறான அரசியல்வாதிகளால் வழிநடத்தப்படும் மக்கள் கூட்டத்தை எத்தனை கடவுள்கள் வந்தாலும் காப்பாற்ற முடியாது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவோ மாகாண சபைகள் தேர்தலை நடத்துவற்கு தனக்கு இன்னும் அவகாசம் தேவை என்கிறார். இந்த நிலையில் புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டு வந்து தமிழ் மக்களுக்கான சிறந்த தீர்வை உறுதிப்படுத்த வேண்டும் என்று தமிழர் தரப்பு கேட்டால் உண்மையில், இது யாருக்கு சாதகமானது. ஜனாதிபதிக்கா அல்லது தமிழ் மக்களுக்கா? இது ஒரு சிறிய விடயம். ஆனால், இந்தச் சிறிய விடயத்தைக்கூடவா தமிழ் அரசு கட்சியின் தலைவர்களால் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது, ஒருமுறை கூறியிருந்தார் அதவாது, "எனக்கு பிரச்னையில்லை, நாங்கள் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசுவதென்றால் பேசலாம்". - ஏன் அவ்வாறு கூறினார்? - அவருக்குத் தெரியும், புதிய அரசியல் யாப்பு பற்றி பேசிக் கொண்டேயிருக்கலாம். ஆனால், இறுதியில் எதுவும் வரப்போவதில்லை. மைத்திரி - ரணில் காலத்தில் இதுதான் நடந்தது. இப்போது பந்தை நீங்கள் விளையாடாமல் ஜனாதிபதி அநுரவின் பக்கமாகத் தள்ளிவிட்டீர்களானால் புதிய அரசியல் யாப்பு பற்றி பேசுவதில் அவருக்கு பிரச்னையிருக்கப் போவதில்லை. இறுதியில் ஜே. வி. பி. விரும்புவது போன்று மாகாண சபைகள் தேர்தலை பிற்போடுவதற்கான வாய்ப்பு என்னும் பழம் நழுவிப் பாலில் விழும்.

இறுதியில் தமிழரின் நிலையோ இருப்பதையும் பறிகொடுத்துவிட்டு, தங்களுக்குள் யார் சுத்தமானவர் என்று விவாதம் செய்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகளின் வாய்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையே ஏற்படும். கிட்டத்தட்ட இப்போதே அவ்வாறானதொரு நிலைமையே காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை - அதாவது, பதின்மூன்றை விடவும் சிறப்பான ஒரு தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பை ஒன்றைக் கொண்டுவரவே முடியாது - ஒருவேளை, கோட்டாபய ராஜபக்ஷ முயற்சித்ததுபோன்று, பௌத்த அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கலாம் - அதனை தென்னிலங்கை கொண்டாடும்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"

- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர்
- சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)

# வெளிநாட்டவர்களுக்கான சாரதி அனுமதிக் கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 21

வெளிநாட்டவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் கட்டணங்களை திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளியிட்டுள்ளார்.

அதன்படி, வெளிநாட்டு பிரஜைக்கு ஒரு மாத காலத்துக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு முன்பு 2,000 ரூபாவாக இருந்த கட்டணம் ரூ.15,000 ஆக அதிகரிக் கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு மேல் மற்றும் இரண்டு மாதங்கள் வரை சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு வசூலிக்கப்படும் கட்டணம் 21,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு மேல் மற்றும் 6 மாதங்கள் வரை சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு வசூலிக்கப்படும் கட்டணம் 30,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

6 மாதங்களுக்கும் மேலாகவும் 12 மாதங்கள் வரையிலும் ஒரு வெளிநாட்டு பிரஜைக்கு சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கான கட்டணம் 45,000 ரூபாவாகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது.

மேலதிகமாக, வெளிநாட்டுப் பிரஜைக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் 15,000 ரூபாவாகும்.

மேலும், சாரதி அனுமதிப் பத்திரம் தொலைவடைந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ அதன் நகலை வழங்குவதற்கான கட்டணம் 15,000 ரூபாவாகும்.

இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது அதற்கு சமமான உரிமத்தை வைத்திருக்கும் இலங்கைப் பிரஜைக்கு புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான கட்டணம் 3,300 ரூபாவில் இருந்து 30,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது அதற்கு சமமான உரிமத்தை வைத்திருக்கும் வெளிநாட்டினருக்கு, புதிய அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான கட்டணம் 15,000 ரூபாவிலிருந்து 60,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய் உட்பட 9 பேர் கைது!

கொழும்பு, நவ. 21

போதைப்பொருள் சுற்றிவளைப்பு சிறப்பு நடவடிக்கையொன்றில், போதைப் பொருள் வைத்திருந்த ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுள் கந்தேகெடிய மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இராணுவ சிறப்புப் படையின் ஒரு சிப்பாய் மற்றும் அவருடன் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட இரண்டு பேரும் அடங்குவர்.


பலகொல்ல, கந்தேகெடிய, தலதென, மீகஹகிவுல, அக்கலவுல் பொத்த மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 20-43 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் ஈடுபட்ட முக்கிய சந்தேக நபரான இராணுவச் சிப்பாய் முதலில் பலகொல்ல பகுதியில் விற்பனைக்காக கொண்டு வந்த ஹெரோயினுடன் கைது செய்யப்பட் டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே ஏனையவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் பணியிலிருந்து விடுமுறையில் வந்த போது குறித்த சிப்பாய் மீகஹகிவுல கந்தெகெட்டிய மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களைத் தொடர்புகொண்டு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டமை முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்ப தால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். மறதியால் பிரச்சினை வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**இடபம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் நன்மை உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். புது சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். விசேஷங்களை நடத்துவீர்கள். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். வளைந்து கொடுத்துப்போவது நல்லது. பொறுமைத் தேவை.

**தனுசு**
கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். முக்கிய பணிகளை போராடி முடிப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் முடிவுகள்எடுப்பீர்கள்.

**கும்பம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
இதுவரை இருந்த அசதி சோர்வு கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய பாதை தெரியும்.

# பொது மக்களின் முறைப்பாட்டில் தனிப்பட்ட விடயங்களே அதிகம்

## யாழில் தகவல் அறியும் ஆணைக்குழு தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 21

பொது மக்களின் முறைப்பாட்டில் அநேகமானவை தனிப்பட்ட விடயங்களே முன்வைக்கப்படுவதாகவும் பொதுவான விடயங்கள் குறைவாக உள்ளன என்றும் தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் தலைவர் டயா லங்காபுர தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் தலைமையுரையாற்றிய ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறுகையில், பொது மக்களால் கோரப்படும் தகவல்களை வழங்குவது கடப்பாடாகும். தகவல் வழங்கப்படாத நிலையில் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு முன்வைக்கப்படுவதாகவும் தினமும் 30 தொடக்கம் 35 வரையான முறைப்பாடுகள் பரிசீலிக்கப்படுவதாகவும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற தூர இடங்களில் உள்ள முறைப்பாட்டாளர்களின் விண்ணப்பங்கள் நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் அவர்களுடன் மேலதிக பரிசீலனைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

மேலும், பொது மக்களின் முறைப்பாட்டில் அநேகமானவை தனிப்பட்ட விடயங்களே முன்வைக்கப்படுவதாகவும் பொதுவான விடயங்கள் குறைவாகவே உள்ளன எனவும் தகவல் உத்தியோகத்தர்கள் உரிய தகவல்களை வழங்கினால் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வருவது குறைவாக இருக்கும் எனத் தெரிவித்து, இந்தச் செயலமர்வில் வழங்கும் மேலதிக அறிவுறுத்தல்களை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். (எ)

## நெடுந்தீவு சூழல் சுற்றுலா ஆய்வு நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், நவ. 21

கியூமெடிக்கா நிறுவனத்தால் நெடுந்தீவு தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு அதன் விவரங்களை உள்ளடக்கிய நூல் வெளியீடு கியூமெடிக்கா சர்வதேச பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜொகானஸ் பீற்றர் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், கியூமெடிக்கா பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சசின்து டிமெல் மற்றும் மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் ரி. சர்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதும் சேதப்படுத்தாமல் பேணவும் பறவைகள், விலங்குகளை பாதுகாக்கவும் உள்ளூர் மக்களின் நலனை உயர்த்தவும் சுற்றுலா பயணிகளுக்கு பொறுப்பான மற்றும் நிலைத்த பயண அனுபவத்தை வழங்கவும் அடிப்படையாகக் கொண்டு நெடுந்தீவு சூழல் சுற்றுலா பல ஆய்வுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நூலாகும். இந்த நூலில் நெடுந்தீவில் உள்ள மருத்துவ குணம் கொண்ட 170 தாவரங்கள், 107 தாவர வகைகள், வெளி நாடுகளிலிருந்து வருகை தரும் பறவைகள் மற்றும் சுற்றுலா இடங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வகையில் வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். விஜயமோகனின் ஒருங்கிணைப்பில் தயாரிக்கப்பட்ட நூல் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 21

நான்காம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், இவ்வாண்டுக்கான காலாண்டு கூட்டமானது இது என்றும் மாவட்ட மாதாந்த, காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ கூட்டமானது சீரான முறையில் நடைபெறுவதாகவும், கவனக்குறை காரணமாகவே சில தவறுகள் இடம்பெறுவதாகவும், நிதி நிர்வாக நடைமுறைகளை சரியான முறையில் கொண்டு செல்வதும் அதற்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதுமே இக்கூட்டத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தார். (எ)

## யாழ். மாவட்டத்தில் நெற் பயிரில் இலை மடிச்சு கட்டி நோய் தாக்கம்

### ஆலோசனைகளை பெற அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாவட்டத்தில் நெற் பயிரில் இலை மடிச்சு கட்டி நோய்த் தாக்கம் உணரப்படும் நிலையில் விவசாயிகள் உரிய காலப் பகுதியில் அருகில் உள்ள விவசாய போதனாசிரியர்களின் ஆலோசனைகளை பெறுமாறு வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரிவித்தார்.

தற்போது மழை பெய்த பின் காற்றோடு சேர்ந்து குளிருடனான காலநிலை அதிகமாக நிலவுவதால் நெற் பயிரில் இலை மடிச்சு கட்டி நோய்த் தாக்கம் ஆரம்பித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் குறித்த நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பகுதிகளிலும் நோய்த் தாக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் நிலவுகின்றன.

எனவே, விவசாயிகள் குறித்த நோய்த் தாக்கத்தை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்துவதற்கு அருகில் உள்ள விவசாய போதனாசிரியர்களை அணுகி அவர்களின் ஆலோசனையை பெற்று கிருமிநாசினிகளை விசுறுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

## "பொது மக்களுக்கு விழிப்புணர்வு அதிகம்"

யாழ்ப்பாணம், நவ. 21

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு அதிகமுள்ளது என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், வரவேற்புரையாற்றிய சிவகரன் மேலும் கூறுகையில், அரசாங்க உத்தியோகத்தர்கள் என்ற வகையில் பொது மக்களால் கோரப்படும் தகவல்களை வழங்க வேண்டிய பொறுப்பு மற்றும் கடப்பாடுகள் உள்ளன. இந்தச் செயலமர்வு தகவல் உத்தியோகத்தர்களை மேலும் வலுப்படுத்தும் செயல்பாடாக அமையும் என்றும் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் விக்கிரமசிங்க மீதான விசாரணை இறுதி கட்டத்தில்!

## சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடத்தும் விசாரணை இறுதிக் கட்டத்தில் இருப்பதாக சட்ட மாஅதிபர் கோட்டை நீதிவான் நெத்தி குமாரவுக்கு அறியப்படுத்தியுள்ளார்.**

இதனையடுத்து மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

சட்ட மாஅதிபர் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக நடத்தப்படும் விசாரணை இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும், மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவுக்கு லண்டன் சென்று அரசாங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த வழக்கை விசாரித்து வருகிறது.

இந்த வழக்கின் விசாரணைக்கு அவசியமான நபர் என்று கூறப்படும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மீதான பயணத் தடையைத் தளர்த்தவேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கை நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், செயலாளரின் சார்பாக பயணத் தடையைத் தளர்த்துவதற்கான கோரிக்கையை மீளப் பெறுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்திர திஸ்ஸ நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

அதன்படி, பயணத் தடையைத் தளர்த்துவதற்கான கோரிக்கையை நீதிவான் நிராகரித்தார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தகவல்களை வழங்கிய ஜனாதிபதி சட்டத்தரணி, தனது மகளின் பிரசவத்துக்காக வெளிநாடு செல்லவேண்டியுள்ளதாகவும் அதற்காக பயணத் தடையைத் தளர்த்துமாறும் செயலாளர் கோரியதாகத் தெரிவித்தார்.

(அ)

# பெல்ஜியம் சென்றார் அருண் ஹேமச்சந்திர!

கொழும்பு, நவ. 21

நான்காவது ஐரோப்பிய ஒன்றிய-இந்தோ பசிபிக் அமைச்சர்கள் மட்ட மன்றத்தில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர நேற்று முன் தினம் புதன்கிழமை பெல்ஜியம் பயணமானார்.

பிரதி அமைச்சர் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை பிரஸ்ஸல்ஸூக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஐரோப்பிய ஒன்றிய-இந்தோ பசிபிக் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் கலந்துகொள்வார் என வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது, ஐரோப்பிய ஒன்றிய - இந்தோ பசிபிக் அமைச்சர்கள் மன்றத்தின் உயர்மட்ட அமர்வுகளில் பிரதி அமைச்சர் பங்கேற்பார். பரஸ்பர ஒத்துழைப்புள்ள முக்கிய துறைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

(அ)

# பாடசாலை மாணவரிடையே அதிகரிக்கும் புகைப் பழக்கம்!

கொழும்பு, நவ. 21

பாடசாலை மாணவர்களிடையே புகைபிடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் துமிந்த யசரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

14 அல்லது 15 வயதுக்குள், பல பாடசாலை மாணவர்கள் சிகரெட்டை முயற்சிக்கத் தொடங்குகிறார்கள். இவ்வாறு புகைபிடிப்பது நுரையீரல் தொடர்பான நோய்களின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கும் என்றும் அவர் கூறினார்.

(அ)

# ஒக்ரோபரில் உற்பத்தி சேவைகள் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 21

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 ஒக்ரோபரில் உற்பத்தி மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதலை காட்டுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

உற்பத்திக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் கடந்த ஒக்ரோபரில் 61.0 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து,

உற்பத்தி நடவடிக்கைகளில் அதிகரிப்பொன்றை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து துணைச் சுட்டெண்களும் வளர்ச்சிக்காக சாதகமாக பங்களித்து, இந்த அதிகரிப்பானது பரந்த அடிப்படையினைக் கொண்டு காணப்படுகின்றது.

பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2025 ஒக்ரோபரில் 66.0 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் சேவைகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை பதிவு செய்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(அ)

# இலங்கை மின்சார சபையின் இலாபத்தில் மாபெரும் சரிவு!

கொழும்பு, நவ. 21

2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், இலங்கை மின்சார சபை ஈட்டிய இலாபம் 85 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அதன் அண்மைய நிதி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள சமீபத்திய நிதி அறிக்கைகளின்படி, 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் அதன் நிதிச் செயல்பாடு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

தற்போதைய இலாபம் 3.58 பில்லியன் ரூபாயாக இருக்கும் நிலையில், கடந்த ஆண்டு இலாபம் 24.58 பில்லியன் ரூபாயாக காணப்பட்டது.

கடந்த ஆண்டின் இதே காலாண்டில் பதிவான இலாபத்துடன் ஒப்பிடுகையில், இது 85 வீத சரிவாகும்.

மேலும், 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஈட்டப்பட்ட 5.31 பில்லியன் ரூபாய் இலாபத்திலிருந்து 32.5 வீத வீழ்ச்சியையும் இது பிரதிபலிக்கிறது.

ஜனவரி முதல் செப்ரெம்பர் 2025 வரையிலான காலப் பகுதிக்கு ஒட்டுமொத்தமாக, இலங்கை மின்சார சபை 9.58 பில்லியன் ரூபாய் நிகர இழப்பைப் பதிவு செய்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவான 143.79 பில்லியன் ரூபாய் என்ற கணிசமான இலாபத்துடன் ஒப்பிடுகையில், இது 107 வீத பின்னடைவாகும்.

2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்ட 18.47 பில்லியன் ரூபாய் என்ற பெரும் இழப்பே இந்த நிதி நெருக்கடிக்கு முக்கிய காரணமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த இழப்பு நிறுவனத்தின் நிதி நிலைத்தன்மையை பெரிதும் பாதித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலக விவகாரம்: அரசாங்கம் நியாயத்தை மறக்க கூடாது

## சபையில் கூறினார் கோடீஸ்வரன் எம். பி.

கொழும்பு, நவ. 21

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் தற்போதைய அரசாங்கமும் கடந்த அரசாங்கங்களை போன்று அந்த பிரதேச மக்களுக்கு நிர்வாக அதிகாரங்களை வழங்குவதற்கு தடையாக செயல்படுகின்றதா?, பழைய அரசாங்கங்களை போன்று இந்த அரசாங்கமும் நியாயத்தை மறக்க கூடாது என இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1993ஆம் ஆண்டில் அமைச்சரவை பத்திரம் ஊடாக கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட்டது.

ஆனால், இன்று அந்த பிரதேச செயலகத்துக்குரிய அதிகாரங்கள் மறுக்கப்பட்டுள்ளன. 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியது.

அமைச்சரவை அனுமதி பெற்ற பிரதேச செயலகமொன்றை என்ன காரணத்துக்காக என்ன நோக்கத்துக்காக கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துடனோ அல்லது வேறு நிறுவனத்துடனோ சேர்க்க வேண்டும்.

இதில் நீதி, நியாயம் என்ன? என்று கேட்கின்றேன். அமைச்சரவை அனுமதி பெற்ற பிரதேச செயலகத்தை இன்னுமொரு பிரதேச செயலகத்துடன் இணைக்க முடியாது. அப்படி செய்வதென்றால் அந்த அமைச்சரவை அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

சட்டப்படி அமைச்சின் செயலாளரோ அல்லது மாவட்ட செயலாளரோ மாற்ற முடியும். கடந்த கால அரசாங்கங்கள் எவ்வாறு இதனை திட்டமிட்டு நில மோசடியில் அதனை கொள்ளையடிப்பதற்காக அந்த அதிகாரங்களை கொடுப்பதற்கு தடையாக இருந்து செயல்பட்டதோ அதேபோன்று இந்த அரசாங்கமும் செயல்படுகின்றதா? பல தடவைகள் உங்களிடம் கேட்டிருந்தோம்.

குழுவொன்றை அமைத்து இது தொடர்பில் ஆராய்வதாக கூறியிருந்தீர்கள். ஆனால், அதனை செய்யவில்லை. இதற்கான காரணம் என்ன? நீங்களும் கடந்த கால அரசாங்கங்களை போன்று இருக்கப் போகின்றீர்களா?, என்பதை குறிப்பிடுங்கள்.

இந்த அரசாங்கத்திடம் நீதியை கேட்கின்றோம். கடந்த அரசாங்கங்கள் செய்த தவறுகள், மோசடிகளை கண்டறிந்து இந்த அரசாங்கம் சரியாக செய்யும் என்று நம்பியிருந்தோம். நீங்களும் பழைய அரசாங்கங்களை போன்று நியாயத்தை மறுக்கக் கூடாது என்பதையும் குறிப்பிட்டுக் கொள்கிறேன்- என்றார். (எ)

# அம்புலன்ஸ் வழங்க மறுத்ததால் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

நுவரெலியா, நவ. 21

கொட்டக்கலை தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான மே பீல்ட் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேயிலை கொழுந்துகளை பறித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் குளவிக் கொட்டுக்குள்ளானார். அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல தோட்ட நிர்வாகம் அம்புலன்ஸ் வழங்காததே இந்த வேலை நிறுத்த போராட்டத்துக்கு காரணம் என தெரிவித்தனர்.

தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு முறையான வசதிகளையும் மரியாதையையும் வழங்குவதில்லை என்றும் இதன் காரணமாக தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையே தொடர்ந்து பிரச்னைகள் நிலவுவதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் கூறினர்.

மேலும், தோட்ட நிர்வாகத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வரும் 24 ஆம் திகதி ஹற்றன் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் இந்தப் பிரச்னை குறித்து ஒரு கலந்துரையாடல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதன் பிறகு இந்தப் பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என்றும் தோட்ட நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எந்தவொரு பிரச்னைக்கும் உரிய தீர்வு கிடைக்கும் வரை வேலைநிறுத்தத்தை கைவிடப் போவதில்லை என்றும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (எ)

# அம்பாறையில் பருவமழையால் அதிகளவில் பிடிபடும் மீன்கள்

கல்முனை, நவ. 21

அம்பாறை மாவட்டத்தில் பருவமழை காரணமாக அங்குள்ள ஆறு, குளம் ஆகியவற்றிலும் கடற்கரை பகுதிகளிலும் அதிகளவான மீன் இனங்கள் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த மாவட்டத்தில் உள்ள கல்முனை கடற்கரை பள்ளிவாசல் பகுதி மற்றும் கிட்டங்கி வீதி, சொறிக்கல்முனை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை பகுதிகளில் வடிந்தோடும் வெள்ள நீரில் சிறு மீன் முதல் பெரிய மீன்கள், கட்டுவலை மற்றும் எறிவலை மூலம் பிடிக்கப்பட்டு அவ்விடத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு அதிகமாக பிடிக்கப்படும் மீன்கள் அவ்விடத்தில் வைத்து மீனவர்களால் விற்கப்படுவதுடன் மக்கள் ஆர்வமாக கொள்வனவு செய்வதை காண முடிகிறது. தற்போது பெய்யும் மழை காரணமாக நன்னீர் மீன்கள் அதிகளவாக பிடிக்கப்படுகிறது.

இதில் கோல்டன் செப்பலி, கணையான், கொய், கொடுவா, பொட்டியான், வெள்ளையா பொடி, இறால், நண்டு வகைகள் போன்றன அதிகளவான விலையில் விற்பனை செய்யப்படுவதுடன் இதர மீன்கள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. இதனால் நன்னீர் மீன் பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் நல்ல வருமானம் ஈட்டக்கூடியதாக உள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, சம்மாந்துறை, கல்முனை மீன் சந்தையில் மீன் விற்பனை சூடு பிடித்துள்ளதுடன் மீனவர்கள் பிரதான வீதிகளில் தற்காலிகமாக மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். (எ-01)

# தம்பலகாமத்தில் சாகித்திய விழா



திருகோணமலை, நவ. 21

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச சாகித்திய விழா நேற்று முன்தினம் புதன்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெய கௌரி சிறீபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜீ. எம். ஹேமந்த குமார, கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் திருமதி மேனகா புவிக்குமார், உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ். லதா மங்கேஸ் உட்பட பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (எ-12)

# ரயிலில் மோதி யானை பலி

திருகோணமலை, நவ. 21

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் ரயிலில் மோதி காட்டு யானை உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 08. 00 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலில் குறித்த யானை மோதி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-12)

# பஸ்ஸில் ஏற முற்பட்டவர் தவறி விழுந்து உயிரிழப்பு

கண்டி, நவ. 21

கண்டியில் வத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத்தளை - கண்டி வீதியில் பிடியேகெதர பகுதியில் பஸ்ஸில் ஏற முற்பட்ட நபரொருவர் பஸ்ஸிலிருந்து கீழே தவறி விழுந்து உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் யட்டிராவன பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார்.

இவர் மாத்தளை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றில் ஏற முற்பட்ட போது பஸ்ஸிலிருந்து கீழே தவறி விழுந்தார்.

காயமடைந்தவர் கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

# பொருளாதார தொகைமதிப்பு குறித்து உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நெறி

திருகோணமலை, நவ. 21

2025- 2026 ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத் தொகைமதிப்பு (விவசாய நடவடிக்கைகள்) தொடர்பில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த பயிற்சி நெறியானது திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் மாவட்ட புள்ளிவிவரவியலாளர் ஷரிபுதீன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது கோமரங்கடவெல பிரதேச செயலக புள்ளிவிவரவியல் உத்தியோகத்தர் எம். சாலின், அபிவிருத்தி உத்தியோகத்தர் தி. லோகமாத்ரி, தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே. என். சமன்குமாரி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சிநெறியில் பிரதேச செயலக துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக புள்ளிவிவரவியல் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ-12)







நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கலாசார இலக்கிய விழா தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை ஒன்றிணைத்து சமூக நல்லிணக்க கலாசார பெருவிழாவாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு...

மொழிகளாலும் எழுதப்பட்ட அறிவித்தல் பலகை தாந்தாமலை செல்லும் நாற்பது வட்டை சந்தியில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை அம்புக்குறி காட்டி போடப்பட்டுள்ளது. அத்துடன், மற்றைய அறிவித்தல் பலகை தாந்தாமலை முருகன் ஆலயத்துக்கு அண்மையாகவுள்ள பொலிஸ் சாவடி சந்தியில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை அம்பு குறியிட்டு காட்டப்பட்டுள்ளது.

திருகோணமலையில் அத்துமீறி கடந்த 16ஆம் திகதி புத்தர் சிலைவைக்கப்பட்டு சரியாக மூன்று தினங்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பெருநிலத்தில் விளம்பர பலகை இடப்பட்டு தாந்தாமலை தமிழர்களின் பூர்வீக நிலத்தில் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை நிறுவும் திட்டமா இது என்று சந்தேகம் எழுந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-05)

## குற்றவாளிகளுக்கு...

அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயல்பாட்டின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி நேற்று தங்காலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், போதைப்பொருள், குற்றச்செயல்கள் என்பவற்றுடன் பிணைந்த கறுப்பு பொருளாதாரம் எமது நாட்டில் எந்த விதத்திலும் அபிவிருத்தி, அமைதி, சுபீட்சம் என்பவற்றை கொண்டுவராது. இந்தப் பேரழிவிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும். இந்தப் பேரழிவு கிராமங்கள், நகரங்கள், குடும்பக் கட்டமைப்பை எந்தளவு ஆக்கிரமித்துள்ளது என்பதை நாம் அறிவோம். குடும்பத்தில் பெரும் எதிர்பார்ப்புடன் வளர்ந்த பிள்ளை இந்த போதைப் பொருளுக்கு அடிமையாகி மோசமான நபராக மாறியிருப்பார். எதிர்பார்ப்புடன் வளர்த்த பிள்ளை சமூகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும் செயல்பாட்டாளராக மாறியிருப்பார். இதனை எந்தப் பெற்றோரால் தாங்க முடியும்?

போதைப் பொருளுக்கு அடிமையாகும் பிள்ளை அடுத்து மோசடிகளில் ஈடுபட ஆரம்பிக்கிறார். திருடராக மோசடிகாரராக அவர் மாறுகிறார். போதைப் பொருள் வலையமைப்புக்கு இரையாகி பணத்துக்காக கொலை செய்ய ஆரம்பிக்கிறார். கைதான 90 வீதத்துக்கும் அதிகமானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாக உள்ளனர். இது எமது நாட்டின் எதிர்காலத்தை முழுமையாக விழுங்கியுள்ளது. போதைப் பொருள் ஊடாக பெருமளவு பணப்பரிமாற்றம் இடம்பெறுகிறது. எந்த வர்த்தகத்தின் ஊடாகவும் பல நூறு வருடங்களில் ஈட்ட முடியாத பணத்தை ஒரு படகின் ஊடாக ஈட்டுகின்றனர்.

இந்தப் பணம் பல்வேறு கறுப்பு வர்த்தகங்களில் ஈடுபடுத்தப்படுகிறது. அந்தப் பணத்தால் அரச பொறிமுறையில் உள்ள பலவீனமானவர்களை வாங்க முடிகிறது. சுற்றிவளைப்புகள் மற்றும் தங்களுக்கு எதிராக அச்சுறுத்தல்களை தடுக்க இவ்வாறு செய்கின்றனர். சில பொலிஸ் நிலையங்கள் இதற்கு எதிராக செயற்படுவதில்லை என சில கிராமங்களில் குற்றம் சாட்டப்படுகிறது. நாம் அனைத்து பொலிஸாரையும் அவ்வாறு கூறவில்லை. சில சமயங்களில் பயமுறுத்தப்பட்டுள்ளனர்.

சில கட்சிகளின் செயல்குழுக்களில் பாதாள உலகத்தினர் அங்கம் வகித்தனர். சில சமயங்களில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்தனர். சில காலங்களில் இளவரசர்களின் பாதுகாப்பிற்காக இருந்தனர். எந்தவொரு குற்றவாளிக்கும் அரசியல் பாதுகாப்பு வழங்கப்படாத அரசாங்கம் இன்று உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் எமக்களித்துள்ள மக்கள் ஆணையில் அவர்களின் எதிர்பார்ப்பு பொதிந்துள்ளது. அந்த மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய 'அகன்று செல்' எனும் பெரும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம். பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. குற்ற வலையமைப்புக்கு எதிராக மக்கள் எழுச்சி பெற வேண்டும். இந்த பேரழிவை தோற்கடிக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும். போதையற்ற கிராமம், போதையற்ற நகரம், போதையற்ற நாட்டை உருவாக்கு வோம். அதற்கு பொதுமக்களின் தலையீடு அவசியம் - என்றார். (ஐ)

## மாவீரர்...

இன்றைய தினம் மாவீரர் வாரம் ஆரம்பமாவதையொட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அத்துடன், பல இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயங்கள் இன்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளன.

பிரதானமாக மாவீரர் நினைவேந்தல் நடைபெறும் மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் மாவீரர்களின் நினைவிடங்கள் ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டு நினைவேந்தல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இடங்களில் இன்றைய தினம் பொதுச் சுடர்ஏற்றப்பட்டு நினைவேந்தல் ஏற்பாட்டு பணிகள் முன்னெடுக்கப்படும்.

இதேசமயம், ஈழத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்கள் பலவற்றிலும் மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அநுர...

கட்சிகள் மற்றும் முன்னர் மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து இயங்கிய விமல் வீரசன்ஸ, சம்பிக்க ரணவக்க, திலீத் ஜயவீர உள்ளிட்ட கட்சி தலைவர்களும் பங்கேற்க மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

நாமல் ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு தெரிவித்திருந்தது. அந்தக் கட்சியின் தலைவர் ரணில் பங்கேற்க மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதேநேரம், அந்தக் கட்சியின் நவீன் திஸநாயக்க தானும் இந்தப் பேரணியில் பங்கேற்க மாட்டார் என்று அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அத்துடன், அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல், அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராகவும் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகளே பங்கேற்கவுள்ளன. (ஐ)

## இந்தியா...

இந்தியா செல்கின்றார்.

ஐ.தே.கவின் முக்கிய பிரமுகரான முன்னாள் அமைச்சர் ஹரின் பெர் ணான்டோ இந்த தக வலை வெளியிட்டார்.

எனவே, நுகே கொடை கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பது சாத்தியமில்லை என்றும் இரண்டாம்கட்ட தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதே ரணிலின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இந்தியாவே...

பாதுகாப்புடன் தொடர்புடையது. இதனால் நாம் பயப்பட வேண்டியதில்லை", - இவ்வாறு தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

மேலும், இந்தியாவுடன் எரிபொருள் தொடர்புகளை ஏற்படுத்தி, குழாய் வழியில் அதனை இலங்கைக்கு கொண்டு வந்தால் எமக்கு இலங்கையில் எரிபொருள் விலைகளையும் குறைக்க முடியும். திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்து தேவையானவற்றை சேமித்து வைத்துக்கொள்ள முடியும்.

இதன்மூலம் எதிர்காலத்தில் எரிபொருள் தொடர்பில் தொடர்பில் பிரச்னைகள் ஏற்படாது. நாங்கள் இந்தியாவைப் பார்த்து பயப்படத் தேவையில்லை. இந்திய மக்கள்தான் எங்களைப் பார்த்துப் பயப்பட வேண்டும். இலங்கையில் இருப்பிடம் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடையது. இதனால் நாம் பயப்பட வேண்டியதில்லை.

வடக்கு, கிழக்கில் தேர்தல் காலத்தில் ஜனாதிபதியால் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதில், மன்னார் காற்றாலைகள் தொடர்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அங்கு புதிதாக காற்றாலைகளுக்கு இடமளிக்கப்படாது என்று கூறப்பட்டது. ஆனால், மக்களின் விருப்பத்துக்கு மாறாக அந்தப் பிரதேசத்தில் 14 காற்றாலைகளை நிறுவியே ஆக வேண்டும் என்று தற்போது ஜனாதிபதி கூறியுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புக்கூற வேண்டும். இந்த காற்றாலைகளுக்கு மக்கள் இணக்கப்பாடு தெரிவித்துள்ளதாக குறிப்பிடுவது என்பது தவறானது - என்றும் கூறினார். (ஐ)

## ஆனந்தசுதாகரின்...

குரலற்றவர்களின் குரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனந்த சுதாகரின் மனைவி ஏற்கனவே உயிரிழந்த நிலையில் அவரின் பிள்ளைகள் இருவரும் பேர்த்தியாரின் (தாயாரின் தாய்) பராமரிப்பில் இருந்தனர். இந்த நிலையில், அவர்களின் பேர்த்தியாரான தேவதாஸ் கமலா (வயது 75) நோயால் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் காலமானார்.

"இதனால், ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் இருவரும் மீண்டும் அநாதரவாகியுள்ளனர். இந்த நிலையிலேயே "சமூக அக்கறை கொண்ட அந்தத் தாயாரின் ஆத்மா சாந்தியுற வேண்டுமாக இருந்தால் ஒட்டுமொத்த உறவுகளையும் இழந்து அவலம் சுமந்து வாழ்கின்ற பள்ளிப் பிஞ்சுகளின் தந்தையான, அரசியல் கைதி ஆனந்தசுதாகர் விடுதலை பெற்று வீடு திரும்பி, அந்தக் குழந்தைகளை அரவணைத்து பாதுகாப்பதற்கு தமிழ்ச் சமூகமாக நாம் வழிசமைக்க வேண்டும்", என்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

## மின்சார...

மேலும், "இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது வலுசக்தி என்பது மக்களினதும் பொருளாதாரத்தினதும் அபிவிருத்தியினதும் இரத்தம் என்றே கூறியது. விலை சூத்திரத்தை திருட்டுத்தனமான சூத்திரம் என்றும் ஜே.வி. பியினரே கூறினர். ஆனால், அந்த சூத்திரத்தின் படியே இந்த அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களும் நடக்கின்றன. 9 ஆயிரம் ரூபாய் கட்டணத்தை 6 ஆயிரம் ரூபாயாகக் குறைப்பதாகவே கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் ஒரு வருடம் கடந்தும் அதே இடத்திலேயே இருக்கின்றனர்.

இவர்கள் மின்சார சபை ஆயிரத்து 300 கோடி ரூபாய் நட்டம் என்று கூறுவதில் எந்த உண்மையும் இல்லை. மாறாக 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் இலாபமே அடைந்துள்ளது. ஆனால், கடந்தகால கடன்கள் அனைத்தையும் சேர்த்தே இந்த செலவை இவர்கள் தயாரிக்கின்றனர். இவ்வாறு கூறி கொள்ளையடித்த மற்றும் வீணடித்த தொகையை பாவனையாளர்கள்மீது சுமத்துவதற்கே முயற்சிக்கின்றனர் - என்றார். (ஐ)

## சைபர்...

கவனம் செலுத் தப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு 24 குற்றங் கள் 2021 இல் 577, 2022இல் 654, 2023 இல் 472, 2024ஆம் ஆண்டில் ஆயிரத்து 539 குற்றங்கள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டில், கடந்த ஒக்ரோபர் 31ஆம் திகதி வரையில் 2 ஆயிரத்து 368 சைபர் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. வடக்கு மாகாணத்திலேயே அதிகளவான குற்றங்கள் பதிவாகியுள்ளன - என்றார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## வரி...

வரி வருமானம் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 216 கோடி ரூபாயாகும். எனவே, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் 6 ஆயிரத்து 7 கோடி ரூபாயால் வரி வருமானம் அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## யாழில்...

பெண்ணுமாக இரட்டை குழந்தைகள் பிறந்தன. பெண் குழந்தை கடந்த ஏப்ரல் மாதம் உயிரிழந்தது.

இந்த நிலையில், ஆண் குழந்தை நேற்று அதிகாலை திடீரென வாந்தி எடுத்ததுடன், மயங்கி விழுந்தது. பெற்றோர் குழந்தையை உடனடியாக சங்கானை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ)

## அர்ச்சுனா...

பேசுகிறார். தமிழரின் கலாசாரமான ஒருவனுக்கு ஒருத்தி என்பதை கூட நிறுவ முடியாதவரே அவர். முகநூலில் ஒழுங்காக தமிழில்கூட எழுத முடியாதவர்தான், நான் சிங்களத்தில் கதைக்கும் போது விட்ட பிழையை பெரிதாகக் கூறினார். தான் யாரை திருமணம் செய்துள்ளார் என்பதைக்கூட கூற முடியாத ஒருவர் எப்படி தமிழ் கலாசாரத்தை மேலோங்க செய்வார்", என்று கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, "இன்று மின்சாரம் தொடர்பான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இளங்குமரன் எம்.பி சம்பந்த மில்லாமல் பேசியதை யாரும் நிறுத்தவில்லை", என்று தெரிவித்தார். அத்துடன், நான் தமிழன், எனக்கு இனவாதம் இல்லை சிங்கள மக்களை காதலிக்கிறேன் என்றும் கூறினார். இதன்போது, அர்ச்சுனா எம்.பியின் ஒலிவாங்கி நிறுத்தப்பட, நாடாளுமன்றத்தில் கடுமையான வாதப் பிரதிவாதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கால்தவறி...

பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சின்னத்துரை ராஜ்வதனன் (வயது 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் புலம்பெயர்ந்து நோர்வேயில் வசித்து வருகிறார். இந்த நிலையில் விடுமுறைய கழிக்க சொந்த இடத்துக்கு திரும்பியுள்ளார்.

நேற்று காலை உணவருந்திவிட்டு கை கழுவுவதற்காக கிணற்றடிக்கு சென்றபோது கால் தவறி கிணற்றினுள் விழுந்ததில் உயிரிழந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் மத சுதந்திரம், உரிமைகளை பாதுகாக்க பிரிட்டன் முழுமையான ஆதரவு!

## பாராளுமன்ற பிரதிச் செயலாளர் சீமா மல்ஹோத்ரா

லண்டன், நவ. 21

**இலங்கையில் உள்ள அனைத்து மத சமூகங்களின், மத சுதந்திரம் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனது தொடர்ச்சியான ஆதரவை பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**



பிரித்தானிய பாராளுமன்ற பிரதிச் செயலாளர் சீமா மல்ஹோத்ரா, பிரித்தானிய பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத சுதந்திரம் தொடர்பில், அனைத்து இலங்கையர்களும் தங்கள் நம்பிக்கையைப் பாகுபாடின்றி கடைப்பிடிப்பதற்கான உரிமைகளைப் பாதுகாப்பது குறித்து பிரித்தானியா தொடர்ந்து கவலைகளை எழுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம், அரசாங்க அதிகாரிகள், மதத்தலைவர்கள், சிறுபான்மைச் சமூகங்கள் மற்றும் சிவில் சமூகக்குழுக்களுடன் தொடர்ந்து செயற்பட்டு வருவதுடன், மதங்களுக்கு இடையேயான கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தோ-பசிபிக் பகுதிக்கான முன்னாள் பிரித்தானிய அமைச்சர், கடந்த ஜனவரி மாதம், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டபோது, மதத் தலைவர்கள் உள்ளிட்டவர்களை சந்தித்ததுடன், மதச் சுதந்திரத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பற்கு, பிரித்தானியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் எடுத்துரைத்தார்.

இதேவேளை, அண்மையில், இந்தோ-பசிபிக் பகுதிக்கான தற்போதைய அமைச்சர், கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கையின் சபாநாயகர், நீதி அமைச்சர் மற்றும் ஏனைய மூத்த அதிகாரிகளைச் சந்தித்தார்.

அதன்போது மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான முக்கியத்துவம் தொடர்பில் விவாதங்களை நடத்தினார் என்றும் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

இந்த நிலையில், சமத்துவம், மத சகவாழ்வு மற்றும் நீண்ட கால நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளை ஆதரிப்பதில் பிரித்தானியா தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாகவும் பிரித்தானிய பாராளுமன்ற பிரதிச் செயலாளர் சீமா மல்ஹோத்ரா வலியுறுத்தியுள்ளார். (அ)

# நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்கமாட்டார் நவீன்

கொழும்பு, நவ. 21

நுகேகொடையில் இன்று நடைபெறவுள்ள பேரணியில் பங்கேற்கப்போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கூட்டத்தில் பங்கேற்பீர்களா, இல்லையா என கட்சியின் செயலாளர் கேட்டார். இதன்போது பங்கேற்கப்போவதில்லை என தெளிவாக குறிப்பிட்டேன் என நவீன் திஸாநாயக்க தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷக்களுடன் இனி ஒருபோதும் அரசியல் பயணம் கிடையாது எனவும் அவர் கூறினார். (அ)

# இரட்டை நிலைப்பாட்டில் செயல்படுகின்றது அரசு!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 21

இனவாதத்தையும் மதவாதத்தையும் வைத்து அரசியல் செய்யவேண்டிய தேவையில்லை. ஆனால் இன்று அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டில் செயற்படுகிறது என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் அரசாங்கத்தால் அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட, அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளன. தங்களின் எதிர்கால நம்பிக்கைகளை இழந்தவர்கள், இந்த அரசாங்கத்தால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் நுகேகொடைக்கு வருவார்கள்.

தேர்தல் காலத்தில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நாங்கள் நினைவூட்டவேண்டும். இந்த அரசு அளவில்லா பொய்கள் கூறிய, எதையும் செய்ய முடியாத அரசு என்று மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். எங்களுக்கு இனவாதம், மதவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை தோற்றுவிக்க வேண்டிய எந்தவித தேவையும் இல்லை.

யாரேனும் இந்த நாட்டின் பௌத்த கலாசாரம் அழிக்கப்படுகிறதென்று, அதனால் ஒரு இனவாத பிரச்னையை உருவாக்கி அரசியல் செய்யலாம் என்று நினைத்தால் அது சரியான வழி அல்ல. நான் பௌத்தன் என்பதில் எனக்கு பயமோ, வெட்கமோ கிடையாது.

அதேபோல பாராளுமன்றத்திலும் வெளியிலும் இருக்கும் இந்து சமூக பிரதிநிதிகள், இந்து, தமிழ் என்று சொல்ல வெட்கப்படவோ? அச்சப்படவோ? வேண்டியதில்லை. முஸ்லிம் ஒருவர் நான் இஸ்லாம், நான் முஸ்லிம், நான் இலங்கையன் என்று சொல்ல வெட்கப்படவோ? அச்சப்படவோ? வேண்டியதில்லை. ஆனால் மதமோ, இனமோ இல்லாத ஆட்சியாளர்கள் நாட்டை ஆட்சி செய்யும் மதத்தையும் இனத்தையும் நம்புகிற மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த முனைகிறார்கள். எனவே இனவாதத்தையும் மதவாதத்தையும் வைத்து அரசியல் செய்ய வேண்டிய தேவையில்லை.

ஆனால் இன்று அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டில் செயல்படுவது புரிகிறது. திருகோணமலை சம்பவம் தொடர்பாக அரசாங்கத்தின் செயல்களைப் பார்த்தால் இந்த விடயம் நன்கு புலப்படுகிறது. மகாசங்கத்துக்கு தாக்குதல் நடத்தியது யார் என்று விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரை பாராளுமன்றில் வைத்து வினவினேன். இன்றுவரை அதற்கு பதில் சொல்ல அரசாங்கத்தால் முடியவில்லை-என்றார். (அ)

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புதிய பணிமனை பம்பலப்பிட்டியில்!

கொழும்பு, நவ. 21

அகில இலங்கை இந்து மாமன்றம், தனது ஆன்மீக, சமூக, கல்வி, வெளியீட்டுப் பணிகளை விரிவுபடுத்தும் செயற்பாடுகளுக்காக கொழும்பு 04, பம்பலப்பிட்டி, அசோகா காடின்ஸ் இல 22 இல், தனது சொந்தப் பணிமனை ஒன்றினை, கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாகத் திறந்து வைத்தது.

மாமன்றத்தின் அங்கத்துவ சங்க உறுப்பினர்களும், நலன் விரும்பிகளும் கலந்து சிறப்பித்த இந் நிகழ்வில் காலை 9.07-10.37 வரை அமைந்த சுபவேளையில், மாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மற்றும் பொதுச் செயலாளர் வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் இப் பணிமனையைத் திறந்து வைத்தனர்.

மாமன்றத்தின் பொருளாளர் ச.க.குசலகுமரன் அன்றைய நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காகவும், மாமன்றத்தின் பொதுக் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதற்காக வெளியிடங்களிலிருந்து வரும் மாமன்றத்தின் அங்கத்துவ சங்கங்களின்



உறுப்பினர்கள் சிரமமின்றித் தங்குவதற்கு ஏதுவாகவும் மூன்று மாடிகளிலமைந்த இப் பணிமனை எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவுள்ளது.

பம்பலப்பிட்டி, அசோகா காடின்ஸில், மாமன்றத்துக்குச் சொந்தமான ஒரு பணிமனை திறந்துவைக்கப்பட்டமை, மாமன்றத்தின் அடுத்த கட்டத்திற்கான நகர்வில்-அதன் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல்கல் எனலாம். (அ)

# போதைப்பொருள் வேட்டையினால் கலக்கமடையும் எதிர்க்கட்சியினர்!

## அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, நவ. 21

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கும்போது, எதிர்க்கட்சியினரே கதிகலங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை ஒருபோதும் இடைநிறுத்தப் போவதில்லை எனத் தொழில் பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

போதைப்பொருளுக்கு எதிராகவும், பாதாளக் குழுக்களுக்கு எதிராகவும் தேசிய மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டு மக்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினாலும் எதிர்க்கட்சியினர் மாத்திரமே மண்ணெண்ணெய் பட்ட சாரைப் பாம்பு போன்று கலக்கமடைந்து குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

# வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கம் தீவிரமடைய வாய்ப்பு

கொழும்பு, நவ. 21

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடல் பிராந்தியத்துக்கு மேலாக தாழ் அமுக்கப் பிரதேசம் ஒன்று நாளை சனிக்கிழமை உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த தாழ் அமுக்கம் மேலும் தீவிரமடைவதுடன் இலங்கையின் வட கரையை அண்மித்ததாக நகர்ந்து செல்லும் என சிரேஷ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

திருகோணமலை தொடக்கம் காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20 - 30 கி.மீ. வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org